# பொதுப்பணித் துறை - கட்டிடங்கள்

மானியக் கோரிக்கை எண் 39

கொள்கை விளக்கக் குறிப்பு - 2009-2010

## முன்னுரை

பொதுப்பணித்துறை பழமையும், பெருமையும் பெற்ற துறையாகும்.
**150** ஆண்டு கால நீண்ட தன் வரலாற்றில்,
இந்த துறை,
கட்டிய அணைக்கட்டுக்கள்,
வெட்டிய கால்வாய்கள்,
பாசனப்பகுதியாக்கிய நிலங்கள்,
எழிலோடு எழுப்பிய கட்டிடங்கள்
தமிழ்நாடு, ஆந்திரா ஆகிய மாநிலங்களில் இன்றும் சான்று கூறி நிற்கிறது.
மழை பொழிந்தாலும், பொய்த்தாலும், பொதுப்பணி ஆற்றுவதில் முதலில் நிற்கின்ற துறை இந்தப் பொதுப்பணித்துறையாகும்.
தான் ஆற்றியப் பணிகளுக்கெல்லாம் சிகரம் வைப்பதுபோல்,
இப்பொழுது,
தமிழ்நாடு சட்டமன்றம்,
தலைமைச் செயலகம்,
நவீன நூலகம்
ஆகியவைகளுக்கான கட்டிடங்கள் கட்டுகின்ற மகத்தான பொறுப்பையும் இந்த பொதுப்பணித்துறை ஏற்று இருக்கிறது.

**2010–2011** ஆம் ஆண்டு தமிழ்நாடு அரசின் நிதி நிலை அறிக்கையை புதிய சட்டமன்ற கட்டிடத்தில் படிக்கின்ற நிலையை இந்த துறை உருவாக்கி தரும் என்ற மகிழ்ச்சிகரமான செய்தியை இம்மாமன்ற உறுப்பினர்களுக்கு இத்துறை தெரிவித்துக் கொள்கிறது.

# 1.0. பொது


"உயர்வகலந் திண்மை அருமையிந் நான்கின்
அமைவரண் என்றுரைக்கும் நூல்"

அரசு கட்டடங்களைக் கட்டும்போது பயன்படுத்துவோரின் தேவைக்கேற்பத் திட்டமிட்டு கட்டடத்தின் பாதுகாப்புக்கு வேண்டிய உறுதியுடன் வடிவமைத்து, இயற்கைச் சீற்றங்களைத் தாங்கும் திறனுடன் கட்டி முடிப்பதில் திருக்குறளில் கூறப்பட்டுள்ள கருத்தினை வழிகாட்டி நெறியாக பொதுப்பணித்துறை பின்பற்றுகிறது.

பொதுப்பணித்துறை இதுவரை "நீர்வளம்" மற்றும் "கட்டடம்" சம்பந்தப்பட்ட பணிகளை செய்து வந்த நிலையில் **12.02.2008** முதல் துறையின் சிறப்புச் செயல்பாடுகள் மற்றும் நிர்வாக வசதிக்காக "நீர்வள ஆதார அமைப்பு" மற்றும் "பொதுப்பணித்துறை (கட்டடம்)" என இரு தனித்துறைகளாக இயங்குமாறு ஆணை பிறப்பிக்கப்பட்டது.

பொதுப்பணித்துறையின் மூலம் பள்ளிக்கல்வித் துறை, மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்பநலத்துறை, நீதிமன்றம், போக்குவரத்து, சிறைகள், தீயணைப்பு மற்றும் மீட்புப்பணி உள்ளிட்ட உள்துறை, வருவாய்த்துறை, வேளாண்மைத்துறை, கால்நடை பராமரிப்பு, பால்வளம் மற்றும் மீன்வளத் துறை, சுற்றுலா மற்றும்

பண்பாட்டுத்துறை, வேலை வாய்ப்பு மற்றும் பயிற்சித்துறை, சமூக நலம் மற்றும் சத்துணவு திட்டத் துறை போன்ற பல்வேறு துறைகளுக்கான கட்டடங்கள் கட்டும் பணி மற்றும் அவற்றின் பராமரிப்புப் பணிகள் போன்றவைகளுடன் பொதுப்பணித்துறையின் கட்டுமானம் மற்றும் பராமரிப்புப் பணிகளும் மேற்கொள்ளப்படுகிறது. பொதுப்பணித்துறையின் மிக முக்கியமான பணிகளுள் ஒன்றாக கருதப்படுவது பல்வேறு துறைகளின் கட்டடத் தேவைகளை அறிந்து அதற்கு உண்டான மாதிரி வரைபடம் மற்றும் வடிவமைப்புகளைத் தயார் செய்து மாநிலம் முழுவதும் சிறந்த கட்டடங்களை கட்டுவதற்கு உறுதுணையாய் இருப்பது.



## 1.1. துறையின் அமைப்பு

பொதுப்பணித்துறை, பல அரசுத் துறைகளுக்கான கட்டடம் சார்ந்த பணியினை மாநிலத்தின் பல்வேறு இடங்களில் மேற்கொள்வதற்காக, பின்வரும் மிகப்பரவலான அலுவலக அமைப்பைக் கொண்டுள்ளது.

- ❖ சென்னையில் துறைத் தலைவராக ஒரு தலைமைப் பொறியாளரும், அவருக்கு உதவியாக கட்டடக் கலையில் தலைமைக் கட்டட கலைஞரும் மற்றும் வடிவமைப்பு, தொழில் நுட்ப உதவிக்காக, கண்காணிப்புப் பொறியாளரின் தலைமையில் சிறப்புப் பிரிவுகளும் உள்ளன.
- ❖ கண்காணிப்புப் பொறியாளர்கள் மற்றும் செயற்பொறியாளர்களின் தலைமையில் முறையே, 11 வட்டங்கள் மற்றும் 41 கோட்டங்கள்.
- ❖ மின் பணிகளுக்காக கண்காணிப்புப் பொறியாளர்கள் தலைமையில் சென்னை, சேலம் மற்றும் மதுரையில் 3 வட்டங்கள், மின் பொறியாளர்கள் தலைமையின் கீழ் 7 கோட்டங்கள்.
- ❖ சென்னையில் ஒரு செயற்பொறியாளரின் தலைமையில் புதிய தொழில் நுட்பங்கள் மற்றும் கட்டுமானப் பொருட்கள் பற்றிய தகவல்களை சேகரித்து பகிர்ந்து கொள்வதற்காக ஒரு சிறப்புக் கோட்டம்.
- ❖ சென்னையில் ஒரு செயற்பொறியாளரின் தலைமையில், மேம்பட்ட தொழில் நுட்ப அறிவினை

பொறியாளர்கள் பெறுவதற்காக பயிற்சி மையம் மற்றும் புதிய கண்டுபிடிப்புகளுக்கான ஆராய்ச்சி குறித்த செயல்பாடுகளுக்கான கட்டட ஆராய்ச்சி மையம்.

## 2.0. முக்கிய செயல்பாடுகள்

பொதுப்பணித்துறை, பின்வரும் முக்கியச் செயல்பாடுகள் மற்றும் அது தொடர்பான செயல்களை நிறைவேற்றி வருகிறது.

- ❖ மாநில அரசின் முதலீட்டு உடைமைகளாக விளங்கும் அரசு கட்டடங்களை திட்டமிடுதல், வடிவமைத்தல், கட்டுமானம் மற்றும் பராமரித்தல்.

- ❖ அரசின் கட்டுப்பாட்டிலுள்ள நினைவுச் சின்னங்கள் மற்றும் நினைவிடங்களை கட்டுதல் மற்றும் பராமரித்தல்.

- ❖ நாடாளுமன்ற மற்றும் சட்டமன்ற உறுப்பினர் தொகுதி வளர்ச்சித் திட்டப் பணிகளை வைப்புத் தொகை பணிகளாக மேற்கொள்ளுதல்.

- ❖ ஆழிப் பேரலை மறு சீரமைப்புப் பணிகள் போன்ற பேரிடர் மறுகட்டுமானப் பணிகளை செயல்படுத்துதல்.

- ❖ பாரம்பரிய கட்டடங்களை புதுப்பித்துப் புனரமைத்தல்.

- ❖ மத்திய அரசு நிறுவனங்கள் மற்றும் மாநில அரசின் பல்கலைக்கழகங்கள் ஆகியவற்றின் கட்டடப் பணிகளை வைப்புத் தொகை பணிகளாக மேற்கொள்ளுதல்.

- ❖ கட்டுமான பொருட்கள் மற்றும் கட்டடப்பணி நடைமுறைகள் குறித்த ஆராய்ச்சி மற்றும் மேம்படுத்தும் பணிகளை மேற்கொள்ளுதல்.
- ❖ ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புத் துறை மற்றும் நீதித்துறை போன்ற துறைகளின் கோரிக்கையின் அடிப்படையில் சொத்து மதிப்பீட்டுப் பணிகளை மேற்கொள்ளுதல்.
- ❖ பொதுக் கட்டடங்களுக்கு உறுதிச் சான்றிதழ்கள், அரசு அலுவலகங்களுக்காக வாடகைக்கு எடுக்கப்படும் தனியார் கட்டடங்களுக்கு நியாய வாடகைச் சான்றிதழ்கள் வழங்குதல்.
- ❖ மிக முக்கியமானவர்கள் மற்றும் மிக மிக முக்கியமானவர்கள் வருகையின்போது அவர்கள் சார்ந்த நிகழ்ச்சிகளுக்கு ஏற்பாடுகள் செய்தல்.

## 3.0. 2009 – 2010 ஆம் ஆண்டிற்கான நிதி ஒதுக்கீடு

2009 – 2010 நிதியாண்டில் கோரிக்கை எண்.39ன் கீழ் ரூ.968.32 கோடியளவில் பின்வரும் கணக்குத் தலைப்புகளின் கீழ் பணிகள் எடுத்துக்கொள்ளப்பட உள்ளன.

| | | (ரூ.கோடியில்) |
|---|---|---|
| (1) முதலீட்டுக் கணக்கு (திட்டம் மற்றும் திட்டம் சாரா பணிகள்) | : | 738.50 |
| (2) வருவாய் கணக்கு (பராமரிப்பு மற்றும் பணியமைப்பு) | : | 229.82 |


**மொத்தம் : 968.32**

மேலும் செலுத்துதல் கணக்குத் தலைப்பில், பிறதுறை பணிகளும் பொதுப்பணித்துறை மற்றும் பிறதுறை கட்டடங்களின் பராமரிப்பு பணிகளும் மேற்கொள்ளப்படுகின்றன.

**துறை வாரியான ஒதுக்கீடு 2009–2010**
**கோரிக்கை எண். 39**
**முதலீட்டுக் கணக்கு**

| வ. எண் | துறையின் பெயர் | வரவு செலவு 2009–2010 (ரூபாய் கோடியில்) | விழுக்காடு |
|---|---|---|---|
| 1 | பொதுப்பணித்துறை | 213.48 | 28.91% |
| 2 | மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்பநலத் துறை | 309.34 | 41.89% |
| 3 | உள்துறை | 112.94 | 15.29% |
| 4 | வருவாய்த் துறை | 71.92 | 9.74% |
| 5 | கல்வித் துறை | 5.74 | 0.78% |
| 6 | பாரம்பரிய கட்டடங்கள் | 2.28 | 0.30% |
| 7 | இதரப்பணிகள் | 22.80 | 3.09% |
| | **மொத்தம்** | **738.50** | **100.00%** |

# துறைவாரியான முதலீடு 2009 – 2010
# முதலீட்டுக் கணக்கு – கோரிக்கை எண். 39



# 4.0. துறைவாரியான திட்டங்கள் 2009–2010

## 4.1. பொதுப்பணித்துறை

### 4.1.1. தமிழ்நாடு புதிய சட்டமன்றப் பேரவை வளாகம் கட்டுதல்

12.05.2007 அன்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ‘‘சட்டசபையில் 50 ஆண்டுகள்’’ பொன் விழாவின் போது மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அறிவித்ததைத் தொடர்ந்து சென்னை ஓமந்தூரார் அரசினர் தோட்டத்தில் புதிய சட்டமன்றப் பேரவை வளாகம் கட்டுவதற்கான முயற்சியை இந்த அரசு எடுத்தது. புதிய சட்டமன்றப் பேரவை வளாகம் இரண்டு தொகுதிகளாக (பிளாக்குகள்) கட்டப்படுகிறது. பிளாக் A–ன் பரப்பளவு 9,30,297 சதுர அடிகள் மற்றும் பிளாக் B–ன் பரப்பளவு 7,43,900 சதுர அடிகள் ஆகும். பிளாக் A–ல் சட்டமன்றப் பேரவை, சட்டமன்றப் பேரவைச் செயலகம், மேதகு ஆளுநர், மாண்புமிகு முதலமைச்சர், மாண்புமிகு அமைச்சர்கள் மற்றும் தலைமைச் செயலர் அவர்களின் அலுவலகங்கள் மற்றும் பல முக்கிய துறைகளின் அலுவலகங்கள் அமையும். பிளாக்–A க்கு ரூ.425.57 கோடிக்கு நிர்வாக ஒப்பளிப்பு வழங்கி தற்போது பணிகள் நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. இப்பணிகள் மே 2010–க்குள் முடிவடையும் என எதிர்பார்க்கப்படுகிறது. பிளாக்–B ல் 30–க்கும் மேற்பட்ட துறைகளை உள்ளடக்கிய புதிய தலைமைச் செயலக கட்டடம் கட்டுவதற்கு ரூ.279.564 கோடிக்கு நிர்வாக ஒப்பளிப்பு வழங்கப்பட்டுள்ளது. தலைமைச் செயலக அனைத்து

துறைகள் மற்றும் சட்டமன்றப் பேரவைச் செயலகம் ஆகியவற்றை உள்ளடக்கி, பார்வையிட வரும் பொது மக்களுக்காகவும் நவீன வசதிகளுடன் இப்புதிய சட்டமன்றப் பேரவை வளாகம் அமையும் என எதிர்பார்க்கப்படுகிறது.

**4.1.2.** பொதுப்பணித் துறையின் **150**–வது ஆண்டு விழாவினை முன்னிட்டு சென்னை பொதுப்பணித்துறை வளாகத்தில் அருங்காட்சியகம் மற்றும் நூலக கட்டடங்கள் கட்டுவதற்கு ரூ.**67.50** இலட்சத்திற்கு நிர்வாக ஒப்பளிப்பு வழங்கப்பட்டுள்ளது. பணிக்கான ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டுள்ளது.

**4.1.3.** சென்னை சைதாப்பேட்டை, தாடண்டர் நகரில் அரசு ஊழியர்களுக்கு **126** குடியிருப்புகள் கட்டுவதற்கு ரூ.**15.00** கோடிக்கு நிர்வாக ஒப்பளிப்பு வழங்கப்பட்டுள்ளது. பணிக்கான ஒப்பந்தப்புள்ளி பெறப்பட்டு பரிசீலனையில் உள்ளது.

## 4.2. மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத்துறை

### 4.2.1. மருத்துவக்கல்லூரிப் பணிகள்

**2008–09** ஆம் ஆண்டு இறுதியில் நிர்வாக ஒப்பளிப்பு வழங்கப்பட்டு பின்வரும் மருத்துவக்கல்லூரிப் பணிகளுக்கு திருத்திய நிர்வாக ஒப்புதல், தொழில் நுட்ப ஒப்புதல் அளித்தல், ஒப்பந்த புள்ளிகள் கோருதல் மற்றும் ஒப்பந்ததாரரை முடிவு செய்தல் ஆகிய தொடக்க பணிகள் நடைபெற்று வருகின்றன.

| வ. எண் | பணி | தொகை (ரூ.கோடியில்) | பணிகளின் நிலை |
|---|---|---|---|
| 1 | சிவகங்கையில் | 10.00 | ஒப்பந்தப்புள்ளி |

| | | | |
|---|---|---|---|
| | புதிய மருத்துவக் கல்லூரி | | கோரப்படவுள்ளது. |

| | | | |
|---|---|---|---|
| 2 | பெரம்பலூரில் புதிய மருத்துவக் கல்லூரி | 10.00 | திருத்திய நிர்வாக ஒப்பளிப்பு பெறப்படவுள்ளது. |
| 3 | சென்னையில் அரசு பொது மருத்துவமனையை விரிவு படுத்துதல் | 250.00 | மதிப்பீடு மருத்துவக் கல்வித்துறை இயக்குநரின் பரிசீலனையில் உள்ளது. |

**பின்வரும் பணிகள் 2007–08ல் ஒப்பளிப்பு அளிக்கப்பட்டு பல்வேறு நிலைகளில் கட்டடப்பணிகள் நடைபெற்று வருகிறது.**

தொடங்கப்பட்ட பணிகள்

| வ. எண் | பணி | தொகை (ரூ.கோடியில்) | பணிகளின் நிலை |
|---|---|---|---|
| 1 | விழுப்புரத்தில் புதிய மருத்துவக் கல்லூரி (கட்டம் I) | 41.01 | பணிகள் நடைபெற்று வருகிறது. ஜுன் 2010–ல் பணிகள் முடிக்கப்படவுள்ளது. |
| 2 | திருவாரூரில் புதிய மருத்துவக் கல்லூரி (கட்டம் I) | 42.77 | பணிகள் நடைபெற்று வருகிறது. ஜுன் 2010–ல் பணிகள் முடிக்கப்படவுள்ளது. |
| 3 | தர்மபுரியில் புதிய மருத்துவக் கல்லூரி | 47.58 | பணிகள் நடைபெற்று வருகிறது. ஏப்ரல் 2010–ல் பணிகள் முடிக்கப்படவுள்ளது. |

| | | | |
|---|---|---|---|
| 4 | மதுரையில் ராஜாஜி மருத்துவமனையை விரிவுபடுத்துதல் | 22.06 | பணிகள் நடைபெற்று வருகிறது. நவம்பர் 2009–ல் பணிகள் முடிக்கப்படவுள்ளது. |
| 5 | சென்னை இராயப்பேட்டை மருத்துவமனைக்கு கூடுதல் கட்டடங்கள் | 9.88 | பணிகள் நடைபெற்று வருகிறது. ஆகஸ்ட் 2010–ல் பணிகள் முடிக்கப்படவுள்ளது. |
| 6 | சென்னையில் குழந்தைகள் நல மையம் மற்றும் மகளிர் மற்றும் குழந்தைகள் மருத்துவமனையில் கூடுதல் கட்டடங்கள் கட்டுதல். | 13.83 | பணிகள் தொடங்கப்பட்டுள்ளது. |
| 7 | சென்னை அரசு பல் மருத்துவக் கல்லூரியில் கூடுதல் கட்டடங்கள் | 13.66 | பணிகள் நடைபெற்று வருகிறது. நவம்பர் 2010–ல் பணிகள் முடிக்கப்படவுள்ளது. |
| 8 | சென்னை கீழ்ப்பாக்கம் மருத்துவக் கல்லூரியில் தங்கும் விடுதி கட்டுதல் | 3.00 | பணிகள் தொடங்கப்பட்டுள்ளது. |

| | | | |
|---|---|---|---|
| 9 | செவிலியர் பள்ளிகளுக்கான விடுதிகள் ஊட்டியில் கட்டுதல் | 1.00 | பணிகள் தொடங்கப்பட்டுள்ளது. |

**தொடங்கப்படவுள்ள பணிகள்**

| வ. எண் | பணி | தொகை (ரூ.கோடியில்) | பணிகளின் நிலை |
|---|---|---|---|
| 1 | விழுப்புரத்தில் புதிய மருத்துவக் கல்லூரி (கட்டம் II) | 58.70 | ஒப்பந்தப்புள்ளி பரிசீலனையில் உள்ளது |
| 2 | திருவாரூரில் புதிய மருத்துவக் கல்லூரி (கட்டம் II) | 50.09 | ஒப்பந்தப்புள்ளி பரிசீலனையில் உள்ளது |
| 3 | அ) செங்கல்பட்டு மருத்துவக் கல்லூரியில் கூடுதல் கட்டடங்கள் | 16.50 | ஒப்பந்தப்புள்ளி பரிசீலனையில் உள்ளது |
| | ஆ) திருநெல்வேலி மருத்துவக் கல்லூரியில் கூடுதல் கட்டடங்கள் | 5.00 | நிர்வாக ஒப்பளிப்பு பெறப்படவுள்ளது |

| | | | |
|---|---|---|---|
| 4 | பின் வரும் மருத்துவக் கல்லூரியில் தங்கும் விடுதி கட்டுதல் | | |
| | அ) திருச்சி | 3.00 | பணி தொடங்கப்படவுள்ளது |
| | ஆ) மதுரை | 2.60 | ஒப்பந்தப்புள்ளி பரிசீலனையில் உள்ளது |
| | இ) செங்கல்பட்டு | 2.60 | மறு ஒப்பந்தப்புள்ளி பரிசீலனையில் உள்ளது. |
| | ஈ) திருநெல்வேலி | 2.60 | நிர்வாக ஒப்பளிப்பு பெறப்படவுள்ளது |
| | உ) ஸ்டான்லி, சென்னை | 2.30 | நிர்வாக ஒப்பளிப்பு பெறப்படவுள்ளது |
| | ஊ) அரசு பல் மருத்துவக் கல்லூரி, சென்னை | 2.40 | நிர்வாக ஒப்பளிப்பு பெறப்படவுள்ளது |
| 5 | பின்வரும் இடங்களில் செவிலியர் பள்ளிகளுக்கான விடுதிகள் கட்டுதல் | | |
| | அ) கோயம்புத்தூர் | 1.00 | மறு ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டுள்ளது |
| | ஆ) இராமநாதபுரம் | 1.00 | நிர்வாக ஒப்பளிப்பு பெறப்படவுள்ளது |

### 4.2.2. தமிழ்நாடு சுகாதார அமைப்புத் திட்டம் (கட்டம் –I )

5 மாவட்டங்களில் 35 அரசு மருத்துவமனைகளுக்கு ரூ.45.62 கோடி மதிப்பீட்டில் கட்டடம் கட்டும் பணி. இதில் 31 பணிகள் முடிவுற்று ஒப்படைக்கப்பட்டுள்ளன, 4 பணிகள் முடியும் தருவாயில் உள்ளன.

### 4.2.3. தமிழ்நாடு சுகாதார அமைப்புத் திட்டம் (கட்டம் –II)

தமிழ்நாட்டில் ரூ.196.97 கோடி மதிப்பீட்டில் 191 மருத்துவமனைகளில் சுகாதார அமைப்பு திட்டம் செயல்படுத்தப்பட்டு, அதில் 47 பணிகள் முடிவுற்றன, 144 மருத்துவமனைகளில் பணிகள் நடைபெற்று வருகிறது.

## 4.3. உள்துறை

### 4.3.1. நீதித்துறை

| வ. எண் | பணி | தொகை (ரூ.கோடியில்) | பணிகளின் நிலை |
|---|---|---|---|
| 1 | தாம்பரத்தில் ஒருங்கிணைந்த நீதிமன்ற கட்டடம் கட்டுதல் | 2.82 | முடிவுற்றது |
| 2 | பெரம்பலூரில் ஒருங்கிணைந்த நீதிமன்ற கட்டடம் கட்டுதல் | 8.75 | முடிவுற்றது |
| 3 | கொடைக்கானலில் ஒருங்கிணைந்த நீதிமன்ற கட்டடம் கட்டுதல் | 2.27 | முடிவுற்றது |
| 4 | திண்டுக்கல் மாவட்டம், வேடசந்தூரில் குற்றவியல் நீதிமன்ற கட்டடம் கட்டுதல் | 2.25 | முடிவுற்றது |

| | | | |
|---|---|---|---|
| 5 | ஆரணியில் ஒருங்கிணைந்த நீதிமன்ற கட்டடம் கட்டுதல் | 3.97 | பணிகள் நடைபெற்று வருகிறது. ஜனவரி 2010–ல் பணிகள் முடிக்கப்படவுள்ளது. |
| 6 | குடியாத்தத்தில் ஒருங்கிணைந்த நீதிமன்ற கட்டடம் கட்டுதல் | 4.40 | பணிகள் நடைபெற்று வருகிறது. டிசம்பர் 2009–ல் பணிகள் முடிக்கப்படவுள்ளது. |
| 7 | அருப்புக்கோட்டையில் ஒருங்கிணைந்த நீதிமன்ற கட்டடம் கட்டுதல் | 3.83 | ஒப்பந்தப்புள்ளி பரிசீலனையில் உள்ளது. |
| 8 | சிவகங்கையில் ஒருங்கிணைந்த நீதிமன்ற கட்டடம் கட்டுதல் | 7.98 | ஒப்பந்தப்புள்ளி பரிசீலனையில் உள்ளது |
| 9 | கடலூரில் ஒருங்கிணைந்த நீதிமன்ற கட்டடம் கட்டுதல் | 10.02 | பணிகள் தொடங்கப்பட்டுள்ளது |
| 10 | ஈரோடில் ஒருங்கிணைந்த நீதிமன்ற கட்டடம் கட்டுதல் | 5.42 | ஒப்பந்தப்புள்ளி பரிசீலனையில் உள்ளது |
| 11 | பரமக்குடியில் ஒருங்கிணைந்த நீதிமன்ற கட்டடம் கட்டுதல் | 2.40 | ஒப்பந்தப்புள்ளி பரிசீலனையில் உள்ளது |

| | | | |
|---|---|---|---|
| 12 | கரூரில் ஒருங்கிணைந்த நீதிமன்ற கட்டடம் கட்டுதல் | 10.00 | கடைகால் பணி நடைபெற்று வருகிறது |
| 13 | அறந்தாங்கியில் ஒருங்கிணைந்த நீதிமன்ற கட்டடம் கட்டுதல் | 3.53 | ஒப்பந்தப்புள்ளி பரிசீலனையில் உள்ளது |
| 14 | பூந்தமல்லியில் ஒருங்கிணைந்த நீதிமன்ற கட்டடம் கட்டுதல் | 4.02 | பணிகள் நடைபெற்று வருகிறது. |
| 15 | ஆலந்துாரில் ஒருங்கிணைந்த நீதிமன்ற கட்டடம் கட்டுதல் | 4.73 | ஒப்பந்தப்புள்ளி பரிசீலனையில் உள்ளது. |
| 16 | கும்பகோணத்தில் ஒருங்கிணைந்த நீதிமன்ற கட்டடம் கட்டுதல் | 9.97 | ஒப்பந்தப்புள்ளி பரிசீலனையில் உள்ளது |
| 17 | நாமக்கல்லில் ஒருங்கிணைந்த நீதிமன்ற கட்டடம் கட்டுதல் | 10.56 | பணிகள் நடைபெற்று வருகிறது. நவம்பர் 2010–ல் பணிகள் முடிக்கப்படவுள்ளது. |
| 18 | துாத்துக்குடியில் ஒருங்கிணைந்த நீதிமன்ற கட்டடம் கட்டுதல் | 8.88 | பணிகள் தொடங்கப்படவுள்ளது. |

## 4.3.2. சிறைத்துறை

### சிறைகளை நவீனமாக்கும் திட்டம்

### 2004 – 2005:

ஆத்தூர், கோபிச்செட்டிபாளையம், நாகப்பட்டினம் போன்ற இடங்களில் துணைச் சிறைகளை மாவட்டச் சிறைகளாக மாற்றுதல்.

பாளையங்கோட்டை, திருச்சி ஆகிய சிறைச் சாலைகளில் ரூ.5.52 கோடியில் பராமரிப்பு மற்றும் புதுப்பித்தல் பணிகள். எடுக்கப்பட்ட மொத்தப் பணிகள் 5, 2 பணிகள் முடிவுற்றது, 3 பணிகள் நடைபெற்று வருகிறது.

### 2005 – 2006:

விருதுநகர் மற்றும் இராமநாதபுரத்தில் துணைச் சிறைகளை மாவட்டச் சிறைகளாக மாற்றுதல் மற்றும் திருச்சியில் புதிய பெண்கள் சிறை கட்டுமானப் பணிகளை முடித்தல், பராமரிப்பு மற்றும் புதுப்பித்தல் பணிகள், கழிவு நீர் மற்றும் குடிநீர் குழாய் இணைப்புகள் ஆகிய பணிகள் மத்திய சிறைச்சாலை கோயம்புத்தூர், சேலம், பாளையங்கோட்டை, கடலூர், திருச்சி, புதுக்கோட்டை, வேலூர் ஆகிய இடங்களில் நடைபெற்று வருகிறது. மொத்தத் தொகையான ரூ.11.23 கோடியில் எடுக்கப்பட்ட மொத்த பணிகள் 70, அவற்றில் 66 முடிவுற்றது, 4 பணிகள் நடைபெற்று வருகிறது.

**2006 – 2007:**

பராமரிப்பு, புதுப்பித்தல், கழிவுநீர் மற்றும் குடிநீர் குழாய் இணைப்புகள் போன்ற பணிகள் சிறைச்சாலைகளுக்குச் செய்தல் – மொத்தத் தொகை ரூ.**3.553** கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டு, மொத்த பணிகள் – **56** அவற்றில் **53** பணிகள் முடிவுற்றது, **3** பணிகள் நடைபெற்று வருகிறது.

## 4.3.3. தீயணைப்பு மற்றும் மீட்புப்பணித்துறை

**2008 – 2009:**

சங்கராபுரம், திருக்கழுக்குன்றம், கூத்தாநல்லூர், குடவாசல் மற்றும் உளுந்தூர்பேட்டை ஆகிய **5** இடங்களில் தீயணைப்பு நிலையம் ரூ.**1.9663** கோடி செலவில் கட்டும் பணி தொடங்கும் நிலையில் உள்ளது.

தண்டாரம்பட்டு, ஓமலூர், ஆரணி, குத்தாலம், கம்பம், திருத்துறைப்பூண்டி, தக்கலை மற்றும் ஒட்டன்சத்திரம் ஆகிய **8** இடங்களில் தீயணைப்பு நிலையம் கட்டுவதற்கு ரூ. **2.00** கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டு எடுக்கப்பட்ட மொத்த பணிகள் **8** அவற்றில் **6** பணிகள் முடிவுற்றது, **2** பணிகள் நடைபெற்று வருகிறது.

## 4.3.4. போக்குவரத்துத் துறை

### 2007 – 2008:

திருவாரூர் மற்றும் நாகப்பட்டினத்தில் மண்டல போக்குவரத்து அலுவலகங்களுக்கு வழித்தட ஆய்வுப்பணி ரூ.0.27 கோடியில் முடிக்கப்பட்டுள்ளது. ஈரோடில் ஒரு வழித்தட ஆய்வுப்பணி அமைக்க பணிகள் நடைபெற்று வருகிறது.

### 2008 – 2009:

கடலூர், நாகப்பட்டினம், கிருஷ்ணகிரி, சங்ககிரி மற்றும் தென்காசி ஆகிய இடங்களில் மண்டல போக்குவரத்து அலுவலகம் ரூ.7.135 கோடியில் கட்டும் பணிகளுக்கான ஒப்பந்தப்புள்ளி பரிசீலனையில் உள்ளது.

சத்தியமங்கலம், சிதம்பரம் மற்றும் மயிலாடுதுறையில் போக்குவரத்து அலுவலகம் ரூ.1.865 கோடியில் கட்டும் பணிகள். சத்தியமங்கலத்தில் பணிகள் தொடங்கப்பட்டுள்ளது, சிதம்பரத்தில் பணித்தளம் ஒப்படைக்கப்படவுள்ளது, மயிலாடுதுறையில் ஒப்பந்தப்புள்ளி பரிசீலனையில் உள்ளது.

மேலும், கிருஷ்ணகிரி, சங்ககிரி, மயிலாடுதுறை ஆகிய இடங்களில் வழித்தட ஆய்வுப் பணி தொடங்கப்படவுள்ளது. சிதம்பரத்தில் பணித்தளம் ஒப்படைக்கப்படவுள்ளது.

## 4.4. வருவாய்த்துறை

### 2007 – 2008:

11 இடங்களில் வட்டாட்சியர் அலுவலகம் ரூ.15.57 கோடியில் கட்டுவதற்கு ஒதுக்கீடு பெற்று, திருப்பூர், கங்கவல்லி, தொட்டியம், வீரகேரளம்புதூர் மற்றும் குளித்தலை ஆகிய 5 இடங்களில் பணிகள் முடிக்கப்பட்டு விட்டன. பரமக்குடி, கல்குளம் மற்றும் பந்தலூர் ஆகிய இடங்களில் 3 பணிகள் நடைபெற்று வருகிறது. குந்தா, காரியாப்பட்டி ஆகிய இடங்களில் 2 பணிகள் ஒப்பந்தப்புள்ளி நிலையில் உள்ளது மற்றும் வாழப்பாடியில் பணித்தளம் ஒப்படைக்கும் நிலையில் உள்ளது.

2007 – 2008 ல் ஒப்பளிப்புப் பெற்று சேலத்தில் புதிய மாவட்ட ஆட்சியர் அலுவலகம் கட்டுவதற்கு ரூ.25.00 கோடியில் கடைகால் பணி நடைபெற்று வருகிறது.

மூன்று இடங்களில் மாவட்ட வருவாய் அலுவலர் குடியிருப்புகள் கட்டுவதற்கு ரூ.1.05 கோடியில் ஒதுக்கீடு பெற்று கிருஷ்ணகிரியில் பணி முடிவுற்றுள்ளது, நாகப்பட்டினத்தில் கடைகால் பணி நடைபெற்று வருகிறது, உதகமண்டலத்தில் ஒப்பந்தப்புள்ளி பரிசீலனையில் உள்ளது.

ஏழு இடங்களில் வருவாய் கோட்ட அலுவலர் குடியிருப்புகள் கட்டுவதற்கு ரூ.1.19 கோடி ஒதுக்கீடு பெற்று திண்டுக்கல், பழனி, லால்குடி, திருச்செந்தூர் ஆகிய இடங்களில் பணிகள் முடிக்கப்பட்டு விட்டன. இராமநாதபுரம் மற்றும் ஆத்தூரில் கூரைபோடும் பணி நடைபெற்று வருகிறது மற்றும் மதுராந்தகத்தில் பணிகள் தொடங்கப்படவுள்ளது.

**2008–09 ல் ஒப்பளிப்பு பெற்று, ஆரம்ப நிலை வேலைகள் நடைபெறும் பணிகள் பின் வருமாறு:**

| வ. எண் | பணி | தொகை (ரூ. கோடியில்) | பணிகளின் நிலை | |
|---|---|---|---|---|
| 1 | மாவட்ட ஆட்சியர் அலுவலகம், தர்மபுரியில் கூடுதல் கட்டடம் கட்டுதல் | 2.39 | பணிகள் நடைபெற்று வருகிறது | |
| 2 | அரியலூரில் மாவட்ட ஆட்சியர் அலுவலகம் கட்டுதல் | 12.88 | ஒப்பந்தப்புள்ளி பரிசீலனையில் உள்ளது | |
| 3 | திருச்சியில் புதிய மாவட்ட ஆட்சியர் அலுவலகம் கட்டுதல் | 12.01 | ஒப்பந்தப்புள்ளி பரிசீலனையில் உள்ளது | |
| 4 | 29 வட்டாட்சியர் குடியிருப்புகள் | 4.5119 | முடிவுற்றது | 1 |
| | | | முடியும் நிலையில் உள்ளவை | 8 |
| | | | கூரைபோடப்பட்டது | 2 |
| | | | லிண்டல் (Lintel) போடப்பட்டது | 3 |
| | | | கடைகால் பணி நடைபெற்றுக் கொண்டிருப்பது | 5 |

| | | | | |
|---|---|---|---|---|
| | | | ஒப்பந்தப்புள்ளி நிலையில் உள்ளது | 5 |
| | | | பணித்தளம் ஒப்படைக்கப்பட வேண்டியது | 5 |
| 5 | 16 வருவாய் ஆய்வாளர் குடியிருப்புகள் | 1.3115 | முடிவுற்றது | 1 |
| | | | முடியும் நிலையில் உள்ளது | 1 |
| | | | கூரைப்போடப்பட்டது | 3 |
| | | | லிண்டல் (Lintel) போடப்பட்டது | 2 |
| | | | கடைகால் பணி நடைபெற்று கொண்டிருப்பது | 6 |
| | | | பணித்தளம் ஒப்படைக்கப்பட வேண்டியது | 3 |
| 6 | 12 இடங்களில் வட்டாட்சியர் அலுவலகம் கட்டுதல் | 19.2116 | ஒப்பந்தப்புள்ளி பரிசீலனையில் உள்ளது | 10 |
| | | | அடித்தளம் அமைக்கும் பணி | 1 |
| | | | உசிலம்பட்டிக்கு வரைபடம் ஒப்புதல் தொடர்பாக வருவாய் நிர்வாக ஆணையரிடமிருந்து எதிர்பார்க்கப்படுகிறது | 1 |

| | | | | |
|---|---|---|---|---|
| 7 | 4 வருவாய் கோட்ட அலுவலர் அலுவலகம் கட்டுதல் | 2.16 | பணிகள் நடைபெற்று வருகிறது | 2 |
| | | | பணி தொடங்கப்படவுள்ளது | 1 |
| | | | ஒப்பந்தப்புள்ளி நிலையில் உள்ளது | 1 |

## 4.5. பள்ளிக் கல்வித் துறை

### 4.5.1. சென்னையில் நவீன மாநில நூலகம் கட்டுதல்

ஆசியாவில் இரண்டாவது பெரிய நவீன மாநில நூலகம் கட்டும் பணிக்கு ரூ. 165.76 கோடிக்கு அரசு நிர்வாக ஒப்புதல் அளித்துள்ளது. இக்கட்டடம் சென்னை கோட்டூர்புரத்தில் அமையும். இது 8 மாடிக் கட்டடமாகும். இந்நவீன கட்டடம் நூலகம், கலையரங்கம், உணவகம் மற்றும் துணை மின் நிலையம் ஆகியவற்றை உள்ளடக்கி முழுவதும் குளிர்சாதன வசதிகளுடன் 34,502 சதுர மீட்டர் (3,71,379 சதுர அடி) பரப்பளவில் அமையவுள்ளது. இவற்றில் 8 தளங்களை உள்ளடக்கிய நூலக கட்டடத்தில் இரண்டு மேல்தளங்கள் கட்டி முடிக்கப்பட்டுள்ளது. கலையரங்க கட்டடம் கடைகால் பணிகள் முடிக்கப்பட்டுள்ளது. உணவக கட்டடம் தரை மற்றும் முதல் தளம் முடிக்கப்பட்டுள்ளது. பணிகள் அனைத்தும் மே 2010–ல் முடித்திட திட்டமிடப்பட்டுள்ளது.

### 4.5.2. நபார்டு திட்டம்

**கட்டம் 3 முதல் 5 வரை –** இத்திட்டத்தின் கீழ் ரூ. 315.98 கோடி மதிப்பீட்டில், 799 பள்ளிகளில் அடிப்படை வசதிகளான கூடுதல் வகுப்பறைகள், ஆய்வுக்கூடம்,

கழிவறைகள் மற்றும் குடிநீர் இணைப்பு போன்றவை அரசு உயர்நிலை மற்றும் மேல்நிலைப் பள்ளிகளுக்கு செய்யப்பட்டு பணிகள் முடிக்கப்பட்டுள்ளன.

**கட்டம் – 6 ல்** எடுக்கப்பட்ட பள்ளிகள் **234 – ரூ.161.32** கோடி ஒதுக்கீடு பெற்று **218** பள்ளிகளில் பணிகள் முடிக்கப்பட்டுவிட்டன. 7 பள்ளிகளில் பணிகள் நடைபெற்று வருகிறது, 7 பள்ளிகளுக்கான பணிகளின் ஒப்பந்தப்புள்ளி பரிசீலனையிலுள்ளது, **2** பள்ளிகளின் பணிகள் கைவிடப்பட்டது.

**கட்டம் – 7** ல் **16** மாவட்டங்களில் **ரூ.131.69** கோடி மதிப்பீட்டில் மொத்தம் **195** பணிகள் எடுக்கப்பட்டு **103** பணிகள் முடிவடைந்து ஒப்படைக்கப்பட்டுள்ளது. மேலும் **34** பணிகள் முடிவடைந்துள்ளது, **41** பணிகள் நடைபெற்று கொண்டிருக்கிறது, **16** பணிகளின் ஒப்பந்தப்புள்ளி பரிசீலனையில் உள்ளது, **1** பணி கைவிடப்பட்டது.

**கட்டம் – 8** ல் **8** மாவட்டங்களில் **ரூ.63.36** கோடி செலவில் மொத்தம் **59** பள்ளிகள் எடுக்கப்பட்டு **58** பள்ளிகளின் பணிகள் ஒப்பந்தப்புள்ளி பரிசீலனையில் உள்ளது, **1** பள்ளியில் பணி தொடங்கப்பட்டுள்ளது.

**கட்டம் – 9 ல்** **22** மாவட்டங்களில் **ரூ.410.743** கோடி செலவில் மொத்தம் **362** பள்ளிகளில் பணிகள் எடுக்கப்பட்டு, **352** பள்ளிகளின் பணிகள் ஒப்பந்தப்புள்ளி நிலையில் உள்ளது, **10** பள்ளிகளில் பணிகள் நடைபெற்று வருகிறது.

### 4.5.3. இதர கல்விப் பணிகள்

திருநெல்வேலி அரசு சட்டக் கல்லூரியில் ஆண்கள் தங்கும் விடுதி கட்டுவதற்கு ரூ.1.68 கோடி ஒதுக்கீடு பெற்று தரைத்தளம் மற்றும் கூரை அமைக்கும் பணி நடைபெற்று வருகிறது. திருச்சியில் பணி கைவிடப்பட்டது.

சென்னை – டி.பி.ஐ வளாகத்தில் மாநில பயிற்சி மற்றும் கல்வி மேம்பாட்டு நிலையம், (SIEMAT)– கட்டுவதற்கு ரூ. 2.50 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டு அடித்தளம் அமைக்கும் பணி நடைபெற்று வருகிறது.

தர்மபுரியில் தலைமைக் கல்வி அலுவலகம் கட்டுவதற்கு ரூ.1.35 கோடி (பகுதி – II திட்டத்தில்) ஒதுக்கீடு செய்யப்பட்டு மறு ஒப்பந்தப்புள்ளி கோரப்படவுள்ளது.

## 4.6. தமிழ் வளர்ச்சி, அற நிலையம் மற்றும் செய்தித்துறை

சென்னை, தமிழ் வளர்ச்சி வளாகத்தில் ஏற்கனவே உள்ள கட்டடத்தில் இரண்டாவது தளம் கட்டுவதற்கு ரூ.0.50 கோடியில் பணி நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. கழிவுநீர், குடிநீர் குழாய் இணைப்புகள் வழங்கும் பணிகளும் நடைபெற்றுக் கொண்டிருக்கிறது.

## 4.7. சமூக பாதுகாப்புத் துறை

காஞ்சிபுரம் மாவட்டத்திலுள்ள ஆத்தூர் மற்றும் விழுப்புரம் மாவட்டத்தில் குழந்தைகள் காப்பகம் கட்டுவதற்கு நிர்வாக ஒப்பளிப்பு நிலையில் உள்ளது.

## 4.8. சட்டமன்ற உறுப்பினர்களுக்கான அலுவலகங்கள்

சட்டமன்ற உறுப்பினர்களுக்கான அலுவலகங்கள் கட்டுவதற்கு ரூ.11.35 கோடி ஒதுக்கீடு பெற்று 234 பணிகளில், 229 பணிகள் முடிவடைந்து ஒப்படைக்கப்பட்டு விட்டன. 5 இடங்களில் பணித்தளம் ஒப்படைக்கப்பட வேண்டியுள்ளது.

## 4.9. பிற்படுத்தப்பட்டோர், மிக பிற்படுத்தப்பட்டோர் (ம) சிறுபான்மையினர் நலத்துறை

### 2005–2006:

416 பிற்படுத்தப்பட்ட / மிகவும் பிற்படுத்தப்பட்ட விடுதிகள் கட்டுவதற்கு ரூ.131.04 கோடி ஒதுக்கீடு பெற்று 322 பணிகள் முடிவு பெற்றது, 22 பணிகள் முடியும் தருவாயில் உள்ளது, 6 பணிகள் நடந்து கொண்டிருக்கிறது, 2 பணிகளில் ஒப்பந்தப்புள்ளி நிலையில் உள்ளது, 10 பணிகளுக்குப் பணித்தளம் ஒப்படைக்கப்படவுள்ளது, 54 பணிகளுக்குத் திருத்திய நிர்வாக ஒப்பளிப்பு நிலையில் உள்ளது.

### 2007–2008:

50 பிற்படுத்தப்பட்டோர் விடுதிகள் கட்டுவதற்கு ரூ.32.15 கோடி ஒதுக்கீடு பெற்று 6 பணிகள் முடிவு பெற்றது, 5 பணிகள் முடிவு பெறும் நிலையில் உள்ளது, 21 பணிகள் நடந்து கொண்டிருக்கிறது, 3 பணிகளின் பணித்தளம் ஒப்படைக்கப்படவில்லை, 7 பணிகளுக்குத் திருத்திய நிர்வாக ஒப்பளிப்பு நிலையில் உள்ளது, 8 பணிகள் ஒப்பந்தப்புள்ளி நிலையில் உள்ளது.

**2008–2009:**

25 பிற்படுத்தப்பட்டோர் / மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர் மரபினர் விடுதிகள் கட்டுவதற்கு ரூ.13.685 கோடி ஒதுக்கீடு பெற்று – 2 பணிகள் நடைபெற்று வருகிறது, 19 பணிகள் ஒப்பந்தப்புள்ளி நிலையில் உள்ளது, 4 பணிகளுக்கு பணித்தளம் ஒப்படைக்கப்பட உள்ளது.

## 4.10. சுற்றுலா மற்றும் பண்பாட்டுத்துறை

மாமல்லபுரத்தில் பேருந்து நிறுத்தம் கட்டுவதற்கு ரூ.4.88 கோடியிலான பணிகள் நிர்வாக ஒப்பளிப்புக்காக உள்ளது.

சென்னை இசைக் கல்லூரி – "பொன்னி வளாகத்தில்" விருந்தினர் மாளிகை கட்டுவதற்கு ரூ.0.406 கோடி ஒதுக்கீடு பெற்று அடித்தளம் அமைக்கும் பணி நடைபெற்று வருகிறது.

காஞ்சிபுரம், மதுரை மற்றும் திருநெல்வேலி மாவட்டங்களில் கலை மற்றும் பண்பாட்டு மையம் கட்டுவதற்கு ரூ.2.25 கோடி நிர்வாக ஒப்பளிப்புக்காக உள்ளது.

## 4.11. கால்நடை பராமரிப்பு, பால்வளம் மற்றும் மீன்வளத்துறை

நபார்டு வங்கி நிதியுதவியின் கீழ் 371 இடங்களில் கால்நடை மற்றும் பராமரிப்பு மையங்கள் கட்டுவதற்கு ரூ.38.94 கோடி ஒதுக்கீடு பெற்று தற்போது பணிகள் முடிவுற்று ஒப்படைக்கப்பட்டுள்ளது.

மேலும் 5 இடங்களில் கால்நடை பராமரிப்பு மையங்கள் கட்டுவதற்கு ரூ.3.05 கோடி ஒதுக்கீடு பெற்று, 4 பணிகள் நடைபெற்று வருகிறது. 1 பணிக்கு திருத்திய நிர்வாக ஒப்பளிப்பு நிலையில் உள்ளது.

## 4.12. நீர்வள நிலவளத் திட்டம் (IAMWARM PROJECT)

சென்னை நந்தனத்தில் வேளாண்மை பொறியியல் துறை வளாகத்தில், பன்முகத் திட்ட அலுவலக அடுக்கு மாடி அலுவலகம் கட்டும் பணிக்கு ரூ.15.00 கோடி ஒதுக்கீடு பெற்று கட்டடக் கலை நிறுவனத்தினை தேர்வு செய்ய பெரிய நிறுவனங்களிடமிருந்து விருப்பம் தெரிவிப்பு (Expression of Interest) கேட்பதற்கு நடவடிக்கையில் உள்ளது.

## 4.13. தமிழ்நாடு மாநில வாணிபக் கழகம் (TASMAC) கட்டடப் பணிகள்

### 4.13.1. பின்வரும் இடங்களில் கிடங்கு மற்றும் அலுவலகம் கட்டுதல்

பெரம்பலூரில் ரூ.1.40625 கோடியில் பணிகள் முடிக்கப்பட்டுள்ளது.

தேனியில் ரூ.1.25 கோடியில் பணிகள் முடிக்கப்பெற்று ஒப்படைக்கப்பட்டது.

எ.சங்கம்பாளையத்தில் ரூ.1.425 கோடியில் பணிகளுக்கான ஒப்பந்தப்புள்ளி ஆய்வில் உள்ளது.

# 4.14. வணிகவரி மற்றும் பதிவுத்துறை

## 4.14.1. வணிகவரித்துறை

### 2005–2006:

சென்னையில் வணிகவரித் துறை அலுவலகக் கட்டடம் கட்டுவதற்கு ரூ. 5.50 கோடி ஒதுக்கீடு பெற்று பணிகள் முடிந்து தற்போது மின் பணிகள் நடைபெற்று வருகிறது.

### 2006–2007:

ஓசூர் வட்டம் தர்மபுரியில் வணிகவரித் துறை அலுவலகக் கட்டடம் கட்டுவதற்கு ரூ.1.54 கோடி ஒதுக்கீடு பெற்று தற்போது பணி முடியும் தருவாயில் உள்ளது.

### 2007–2008:

மதுரை மாவட்டத்தில் பயிற்சி மையம் மற்றும் மாநாட்டு கூடம் கட்டுவதற்கு ரூ.0.40 கோடி ஒதுக்கீடு பெற்று தற்போது பணிகள் முடியும் தருவாயில் உள்ளது.

## 4.14.2. பதிவுத்துறை

### 2005–2006:

ஆரணி, காயல்பட்டினம், கடலூர், சத்தியமங்கலம், வேர்கிளம்பி, செய்யூர், இராமேஸ்வரம், திருப்போரூர், திருவள்ளூர் மற்றும் மேட்டுப்பாளையம் ஆகிய இடங்களில் சார்பதிவாளர் அலுவலகங்கள் கட்டுவதற்கு ரூ.1.50 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டு மொத்தம் உள்ள 10 பணிகளில் 9 பணிகள்

முடிவடைந்துவிட்டது, 1 பணி நடைபெற்றுக் கொண்டிருக்கிறது.

**2006–2007:**

மீமிசல், மன்னார்குடி, ஆனந்தபுரம், விக்கிரவாண்டி, இடைகால், வீரசிகாமணி, கங்கை கொண்டான், உடையார்பாளையம், ஒட்டன்சத்திரம், வந்தவாசி, இராமகிருஷ்ணராஜ்பேட்டை, செங்கல்பட்டு, கலசப்பாக்கம் மற்றும் கே.வி.குப்பம் ஆகிய இடங்களில் சார் பதிவாளர் அலுவலகம் கட்டுவதற்கு ரூ. 2.25 கோடி ஒதுக்கீடு பெற்று மொத்தம் 14 பணிகள் எடுக்கப்பட்டு அனைத்து பணிகளும் முடிவு பெற்று ஒப்படைக்கப்பட்டது.

## 4.15. அவசரகால ஆழிப் பேரலை மறு சீரமைப்புத் திட்டம்

ஆழிப் பேரலைகளால் பாதிக்கப்பட்ட பொதுப்பணித் துறை, வருவாய்த்துறை, கால்நடை பராமரிப்பு, மக்கள் நல்வாழ்வு மற்றும் கல்வி ஆகிய துறைகளுக்கான கட்டடங்களைப் பராமரித்தல், புதுப்பித்தல், மேம்படுத்துதல் ஆகிய பணிகளுக்கு ரூ.40.018 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டு மொத்தம் 340 பணிகள் எடுக்கப்பட்டு, 334 பணிகள் முடிவுற்றது, 2 பணிகள் நடைபெற்று வருகிறது, 2 பணிகளின் திருத்திய நிர்வாக ஒப்பளிப்பு கருத்துரு பரிசீலனையில் உள்ளது, 1 பணி நீதிமன்ற வழக்குக் காரணத்தால் நிறுத்தப்பட்டுள்ளது, 1 பணி தொடங்கப்படவுள்ளது.

## 4.16. பாரம்பரிய கட்டடங்கள்

பின்வரும் பணிகளுக்கான மதிப்பீடுகள் உயர் நீதிமன்றத்தின் கட்டடக் குழு ஒப்புதலை எதிர்நோக்கி உள்ளது.

**2007 – 2008:**

சென்னை, இராஜாஜி சாலையில் உள்ள பெருநகர குற்றவியல் நீதிமன்றத்தை மேம்படுத்துதல் ரூ.0.50 கோடி மதிப்பீட்டில் சென்னை உயர்நீதிமன்றப் பதிவாளரிடம் ஒப்புதலுக்கு அனுப்பப்பட்டுள்ளது. திருச்சியில் மாவட்ட நீதிமன்ற வளாகத்தில் ரூ.0.65 கோடிக்கான பணிகள் சென்னை உயர்நீதிமன்றப் பதிவாளரிடம் ஒப்புதலுக்கு அனுப்பப்பட்டுள்ளது.

சென்னை உயர்நீதிமன்றக் கட்டட முகப்புக்கு அலங்கார ஒளியூட்டுதல் பணிக்கு ரூ.0.50 கோடி மதிப்பீட்டில் சென்னை உயர்நீதிமன்றப் பதிவாளரிடம் ஒப்புதலுக்கு அனுப்பப்பட்டுள்ளது.

சேப்பாக்கம் அரண்மனையைப் புனரமைத்தல் பணிக்காக ரூ.3.50 கோடியில் பணிகள் நடைபெற்று வருகிறது.

**2008 – 2009:**

சென்னை அருங்காட்சியக வளாகத்தில் உயர் அழுத்த மின்மாற்றி அமைப்பதற்கு ரூ.0.66 கோடிக்கு திருத்திய நிர்வாக ஒப்பளிப்பு பரிசீலனையில் உள்ளது.

**2009 – 2010:**

சென்னை, அருங்காட்சியக கட்டடம் புதுப்பித்தல். (கட்டுமானம் & மின்துறை) ரூ.2.20 கோடியில் மதிப்பீடு தயாரிக்கப்பட்டு வருகிறது.

## 4.17. தொல்பொருள் இயல் துறை

**2007–2008:**

13 கோவில்களில் புனரமைப்புப் பணி மற்றும் 22 இடங்களில் enamel protection அறிவிப்புப் பலகை அமைப்பதற்கு ரூ.1.87கோடி ஒதுக்கீடு பெற்று, 13 கோவில்களில், 5 பணிகள் முடிக்கப்பட்டுள்ளன, 4 பணிகள் நடைபெற்றுக் கொண்டிருக்கிறது, மீதமுள்ள 4 பணிகளுக்கு ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டுள்ளது.

மதுரை திருமலை நாயக்கர் மகால் மறு சீரமைப்புப் பணிக்கு ரூ.3.00 கோடியில் பணி ஆரம்பிக்கப்பட்டு தற்போது பணிகள் முடியும் தருவாயில் உள்ளது.

## 4.18. தற்போது நடைபெற்று வரும் பெரும் பணிகள் மற்றும் எடுத்துக் கொள்ளப்படவுள்ள பெரும் பணிகள்

இந்த ஆண்டில் முன்னேற்றத்தில் உள்ள பெரும் பணிகள் மற்றும் எடுத்துக் கொள்ளப்படவுள்ள பெரும் பணிகள் ஆகியவை முறையே இணைப்பு–I மற்றும் இணைப்பு–II ல் தரப்பட்டுள்ளன.

# 5.0. பகுதி II திட்டங்கள்

**5.1.** **2007 – 2008** க்கான பகுதி II திட்டத்தில் ரூ.1.00 கோடி அளவில் தஞ்சாவூரில் கூடுதல் சுற்றுலா மாளிகை கட்டும் பணி முடியும் நிலையில் உள்ளது.

**5.2.** **2008 – 2009** க்கான பகுதி II திட்டத்தில் மொத்தம் 10 பணிகள் எடுக்கப்பட்டு, இதில் 9 பணிகள் முடிவுற்றது. மேலும் தூத்துக்குடி, பெருந்திட்ட வளாகத்தில் கூடுதல் சுற்றுலா மாளிகையில் 5 அறைகள் அமைக்கும் பணி ரூ.60.00 இலட்சம் – பணி முடியும் தருவாயில் உள்ளது.

**5.3.** **2009 – 2010** ம் ஆண்டில் பின்வரும் 10 பணிகளுக்கு நிதிநிலைக் குழு ஒப்புதல் அளித்துள்ளது. அரசாணைகள் விரைவில் வெளியிடப்படும்.

1. வேலூர் மாவட்டம் ஏலகிரிமலையில் இரண்டு அறைகள் கொண்ட ஆய்வு மாளிகை கட்டுவதற்கு ரூ.40.00 இலட்சம்.

2. வேலூரில் 4 தங்கும் அறைகள் கொண்ட கூடுதல் சுற்றுலா மாளிகை கட்டுவதற்கு ரூ.55.00 இலட்சம்.

3. தலைமைப் பொறியாளர் (கட்டடம்), கட்டட அமைப்பு பொதுப்பணித்துறைப் பிரிவில் கணிணி, யு.பி.எஸ், ஸ்கேனர், பிரிண்டர் வாங்குவதற்கு ரூ.15.00 இலட்சம்.

4. பொதுப்பணித்துறையில் கட்டட அமைப்பின் வட்ட அலுவலகங்களுக்கு 13 படி நகல் இயந்திரங்கள் வாங்குவதற்கு ரூ.7.00 இலட்சம்.

5. இராமநாதபுரம் மாவட்டம் கடலாடியில் 2 அறைகள் கொண்ட ஆய்வு மாளிகை கட்டுவதற்கு ரூ.23.00 இலட்சம்.

6. கொதிகலன்கள் இயக்குனரகம், சென்னை அலுவலகத்திற்கு கணினி, யு.பி.எஸ். ஸ்கேனர், பிரிண்டர் வாங்குவதற்கு ரூ.5.51 இலட்சம்.

7. திருநெல்வேலியில் மிக மிக முக்கிய பிரமுகர்கள் தங்குவதற்கு 4 தனி அறைகள் கொண்ட கூடுதல் சுற்றுலா மாளிகை கட்டுவதற்கு ரூ.55.00 இலட்சம்.

8. கன்னியாகுமரி மாவட்டம் நாகர்கோவிலில் 2 அறைகள் கொண்ட ஆய்வு மாளிகை கட்டுவதற்கு ரூ.23.00 இலட்சம்.

9. திண்டுக்கல் மாவட்டம், பழனியில் 2 அறைகள் கொண்ட ஆய்வு மாளிகை கட்டுவதற்கு ரூ.23.00 இலட்சம்.

10. கோயம்புத்தூர் மாவட்டம், மேட்டுப்பாளையத்தில் இரண்டு உதவிப் பொறியாளர் குடியிருப்பு கட்டுவதற்கு ரூ.19.49 இலட்சம்.

**துரைமுருகன்**
**பொதுப்பணி மற்றும் சட்ட அமைச்சர்**

## இணைப்பு – I

## முன்னேற்றத்தில் உள்ள பெரும் பணிகள்

| வ. எண் | பணியின் பெயர் | தொகை (ரூ.கோடியில்) | தோராயமாக பணி முடியும் நாள் |
|---|---|---|---|
| 1. | சென்னை ஓமந்தூரரார் அரசினர் தோட்டத்தில் தமிழ்நாடு புதிய சட்டமன்றப் பேரவை வளாகம். (பிளாக்–A) | 425.57 | மே 2010 |
| 2. | நவீன மாநில நூலகம், கோட்டூர்புரம், சென்னை. | 165.764 | மே 2010 |
| 3. | நபார்டு – பள்ளிப் பணிகள் – (கட்டம் – VII) 16 மாவட்டங்கள் – மொத்தம் 195 பள்ளிகள். | 131.69 | மார்ச் 2010 |
| 4. | புதிய மருத்துவக் கல்லூரி, தருமபுரி. | 47.58 | ஜுன் 2010 |
| 5. | புதிய மருத்துவக் கல்லூரி, திருவாரூர் (கட்டம் – 1) . | 42.77 | ஜுன் 2010 |
| 6. | புதிய மருத்துவக் கல்லூரி, விழுப்புரம்(கட்டம் – I). | 41.01 | ஜுலை 2010 |
| 7. | ஒருங்கிணைந்த நீதிமன்ற கட்டடம், ஆரணி, குடியாத்தம், கடலூர் மற்றும் கரூர் | 28.39 | டிசம்பர் 2009 |
| 8. | சேலம் புதிய மாவட்ட ஆட்சியர் அலுவலகக் கட்டடம். | 25.00 | ஆகஸ்டு 2010 |

| | | | |
|---|---|---|---|
| 9. | மதுரை இராஜாஜி மருத்துவமனை விரிவுபடுத்துதல். | 22.06 | நவம்பர் 2009 |
| 10. | சென்னையில் குழந்தைகள் நல மையம் மற்றும் மகளிர் மற்றும் குழந்தைகள் மருத்துவமனையில் கூடுதல் கட்டடங்கள் கட்டுதல். | 13.83 | ஜனவரி 2011 |
| 11. | சென்னை அரசு பல் மருத்துவக் கல்லூரியில் கூடுதல் கட்டடங்கள். | 13.66 | ஆகஸ்டு 2010 |
| 12. | சென்னை இராயப்பேட்டை மருத்துவமனையில் கூடுதல் கட்டடம். | 9.88 | ஆகஸ்டு 2010 |
| 13. | வணிகவரித்துறை அலுவலக கட்டடம், கிரீம்ஸ் சாலை, சென்னை. | 5.50 | ஜுன் 2009 |
| 14. | வட்டாட்சியர் குடியிருப்பு – 29. | 4.5119 | டிசம்பர் 2009 |
| | **மொத்தம்** | **977.2159** | |

## இணைப்பு – I I

## எடுத்துக் கொள்ளப்படவுள்ள பெரும் பணிகள்

| வ. எண் | பணியின் பெயர் | தொகை (ரூ.கோடியில்) |
|---|---|---|
| 1. | நபார்டு பள்ளிப் பணிகள் – (கட்டம் IX) – 22 மாவட்டங்கள் – மொத்தம் 362 பள்ளிகள். | 410.743 |
| 2. | சென்னை ஓமந்தூரார் அரசினர் தோட்டத்தில் 30 துறைகளை உள்ளடக்கிய புதிய தலைமைச் செயலகம். (பிளாக்–B) | 279.564 |
| 3. | அரசு பொது மருத்துவமனை, சென்னை விரிவாக்கப் பணிகள். | 250.00 |
| 4. | நபார்டு பள்ளிப் பணிகள் – (கட்டம் VIII) – 8 மாவட்டங்கள் – மொத்தம் 59 பள்ளிகள். | 63.36 |
| 5. | புதிய மருத்துவக் கல்லூரி, விழுப்புரம் (கட்டம் – II). | 58.70 |
| 6. | அருப்புக்கோட்டை, சிவகங்கை, ஈரோடு, பரமக்குடி, அறந்தாங்கி, பூந்தமல்லி, ஆலந்துார், கும்பகோணம் மற்றும் நாமக்கல்லில் ஒருங்கிணைந்த நீதிமன்றங்கள் கட்டுதல். | 52.95 |
| 7. | புதிய மருத்துவக் கல்லூரி, திருவாரூர் (கட்டம் – II). | 50.09 |
| 8. | செங்கல்பட்டு மற்றும் திருநெல்வேலி அரசு மருத்துவக் கல்லூரிகளில் கூடுதல் கட்டடங்கள். | 21.50 |
| 9. | 12 இடங்களில் வட்டாட்சியர் அலுவலகக் கட்டடங்கள். | 19.216 |

| | | |
|---|---|---|
| 10. | சென்னை சைதாப்பேட்டை, தாடண்டர் நகரில் அரசு ஊழியர்களுக்கான 126 குடியிருப்புகள் கட்டுதல். | 15.00 |
| 11. | சென்னை நந்தனத்தில் வேளாண்மை பொறியியல் துறை<br>வளாகத்தில் பன்முகத்திட்ட அலுவலகம் (M.D.P.U) அடுக்கு மாடி கட்டும் பணி. | 15.00 |
| 12. | 25 பிற்படுத்தப்பட்டோர் / மிகவும் பிற்படுத்தப்பட்டோர் / சீர்மரபினர் மாணவர் தங்கும் விடுதி கட்டுதல். | 13.685 |
| 13. | புதிய மாவட்ட ஆட்சியர் அலுவலகம், அரியலூர். | 12.88 |
| 14. | புதிய மாவட்ட ஆட்சியர் அலுவலகம், திருச்சி. | 12.01 |
| 15. | புதிய மருத்துவக் கல்லூரி, சிவகங்கை. | 10.00 |
| 16. | புதிய மருத்துவக் கல்லூரி, பெரம்பலூர். | 10.00 |
| 17. | கடலூர், நாகப்பட்டினம், கிருஷ்ணகிரி, சங்ககிரி மற்றும் தென்காசியில் மண்டல போக்குவரத்து அலுவலகம் கட்டுதல். | 7.135 |
| | **மொத்தம்** | **1301.833** |